DINATHANTHI-17-MAR-2020

## கொரோனா எதிரொலி:

# உலகம் முழுவதும் ஈஷா நிகழ்ச்சிகள் ரத்து

சென்னை, மார்ச்.17-

ஈஷா யோகா மையத்தின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

மத்திய அரசின் பொது சுகாதார ஆலோசனையை உடனடியாக செயல்படுத்தும் விதமாக, ஈஷா யோகா மையம் சார்பில் உலகம் முழுவதும் நடைபெற இருந்த அனைத்து விதமான நிகழ்ச்சிகளும் மறுதேதி குறிப்பிடாமல் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனது தலைமையில் மும்பையில் நடக்க இருந்த 'இன்னர் என்ஜினீயரிங்' நிகழ்ச்சியும், ஏப்ரல் மாதம் தென் ஆப்பிரிக்கா செல்ல இருந்த பயணமும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. யோகா வகுப்புகளை நடத்துவதற்காக பயணிக்கும் யோகா ஆசிரியர்களும் தங்கள் பயணங்களை நிறுத்தி வைத்துள்ளனர். கோவை ஈஷா யோகா மையத்துக்கு வருகை தரும் அனைவரும் மருத்துவ பரிசோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். ஈஷா மையத்தில் தங்கி இருப்பவர்களுக்கு 3 நாட்களுக்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.